# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2070/29 - 2018 මැයි මස 10 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.05.10

*2070/29 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத்துறைச் சட்டம்**

*2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத்துறைச் சட்டத்தின் 70 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மதஅலுவல்கள் அமைச்சர் ஜோன் அந்தோனி இம்மானுவேல் அமரதுங்க ஆகிய நான் காணி எடுத்தல் சட்டத்தின் 49 (ஏ) பிரிவின் பிரகாரம் கீழ்க் குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபையின் மூலம் அபிவிருத்தி செய்வதற்கு எண்ணியுள்ளதை இக்கட்டளை மூலம் அறியத்தருகின்றேன்.*

ஜோன் அந்தோனி இம்மானுவேல் அமரதுங்க,<br>சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும்<br>கிறிஸ்தவ மதஅலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,<br>*2018, மே 03.*

**அட்டவணை**

*கிராம அலுவலர் பிரிவு 2ஏ வராஹேன பிரதேசம், பெந்தோட்ட பிரதேச செயலாளர் பிரிவு, காலி மாவட்டம், தென் மாகாணத்தில் வராஹேன கிராமத்தில் அமைந்துள்ள இக் காணித்துண்டானது 11.8652 ஹெக்டயார் (29 ஏக்கர் 1 றூட் 9.11 பேர்ச்) நில அளவை மதிப்பீட்டின்படி இல. GA/BNT/2016/661 லொட் இலக்கம் A, B, G, H என குறிப்பிடப்பட்டுள்ளது.*

வடக்கு : ரோபல்கொட கிராமம், கட்டுகுறுந்தவத்த அலவத்கொட கிராமம்;<br>
கிழக்கு : அலவத்கொட கிராமம், அல்விஸ் மாவத்த;<br>
தெற்கு : வராஹேன கிராமத்தின் பண்டாரவத்த, லுணுகெராவ மற்றும் லுணுகெராவயாய ஆகிய;<br>
மேற்கு : கொழும்பு, காலி நெடுஞ்சாலை.

*5 - 635*


1A - G 27588 - 17 (2018/05) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*